## 6.4 1997–98 மற்றும் 1998–99–100 சமத்துவபுர குடியிருப்புகளுக்கு இலவசமாக மின் இணைப்பு ரூ.81.00 இலட்சம் ஒதுக்கீடு

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (நி.எ. 2) துறை

அரசாணை (நிலை) எண்.124 நாள் : 20.10.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.171. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.10.97
2. அரசு கடிதம் எண் 31262/நி.எ.4/97–3 நாள் 23.12.97
3. அரசாணை (நிலை) எண் 43 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 18.5.98
4. அரசாணை (பத்தாண்டு) எண்.99, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12.06.98
5. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையரின் கடித எண் ஆ1/41732/97 நாள் 24.8.98

**ஆணை**

1. இந்தியத் திருநாட்டின் பொன்விழா ஆண்டின் சாதிமத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை அமைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக 100 வீடுகள் கொண்ட 50 சமத்துவபுரங்கள் அமைக்கும்படி பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஆணை இடப்பட்டது. இந்த 100 வீடுகளில் 40 ஆதி திராவிடர்களுக்கும், 25 மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், 25 பிற்படுத்தப்பட்டோருக்கும், 10 பிற சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒதுக்கப்படும்.

2. அதேபோல் 1998–99ஆம் நிதியாண்டிற்கும், மாவட்டங்களில் 100 வீடுகள் கொண்ட 50 சமத்துவபுர குடியிருப்புகள் அமைத்திட நில எடுப்பு செய்து ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், பிற சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஆகிய அனைவருக்கும் 5 செண்ட் வீட்டு மனைகள் இலவசமாக வழங்கவும், அம்மனைகளில் வீடுகள் கட்டிக்கொள்ள ஒவ்வொருவருக்கும் ரூ.35,000/– வீதம் மானியமாக வழங்கிட மொத்தம் ரூ.17.50 கோடி ஒப்பளிப்பு செய்து பார்வை மூன்றில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டது. மேலும், சாலைகள், தெருவிளக்குகள், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் குடிநீர் வசதி போன்றவற்றை நிர்மானிக்க தேவையான முதலீடு அரசின் பல்வேறு திட்ட ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படும் நிதியிலிருந்து செலவிடப்படும் எனவும் ஆணையிடப்பட்டது.

3. மேற்கண்டுள்ள சூழ்நிலையில், கடந்த 06.06.98 அன்று நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் சமத்துவபுரங்கள் அமைப்பது பற்றி ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது , மாவட்டங்களில் சமத்துவபுர பணிகள் மிகவும் மந்தமாக நடந்து வருவதாக அறியப்பட்டது. எனவே, இத்திட்டத்தினை மேலாய்வு செய்யும்பொருட்டு ஒரு தனி அலுவலர் நியமனம் செய்யப்படலாமெனவும், இச்சமத்துவபுர குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அரசு செலவிலேயே வழங்கப்படலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி திரு.ஏ.நாகராசன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர், தனது அலுவலகப் பணிகளுக்கு இடையூறின்றி சமத்துவபுரம் அமைக்கும் பணிகளை மிகவும் கூர்ந்து மேலாய்வு செய்யும்பொருட்டு பார்வை நான்கில் காணும் அரசாணையில் தனி அலுவலராக நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

4. மேற்கண்டுள்ளபடி, தற்போது 1997–98 மற்றும் 1998–99 ஆகிய நிதியாண்டுகளில் அமையவிருக்கும் 10,000 சமத்துவபுர வீடுகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கிட மொத்தம் ரூ.81,00,000 (ரூபாய் எண்பத்தி ஒன்று இலட்சம் மட்டும்) அரசு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. மேலும் இவ்வாறு ஒவ்வொரு சமத்துவபுர குடியிருப்புகளுக்கும் பொதுவாக அளிக்கப்படும் மின் இணைப்பு கம்பங்களிலிருந்து ஒவ்வொரு பயனாளிகளும் தத்தம் வீடுகளுக்கும், வீடுகளுக்குள் வடிவமைக்கப்படும் மின் இணைப்புகளுக்கும், தங்கள் செலவிலேயே மின் இணைப்புகளை செய்து கொள்ள வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

5. இது ஒரு புதுப்பணி குறித்த செலவாகும். இதற்கு காலப்போக்கில் சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாரா (B.G.I.) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பரா செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகள் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**6. SAMATHUVAPURAM**

6. மேலே ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்ட இத் தொகை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் என ஆணையிடப்படுகிறது. இது குறித்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையர் அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட செலவுத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> “2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 பொது 800 ஏனைய செலவுகள் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநில திட்டம் JP “சமத்துவபுரம்” அமைத்தல் 09 பல்வகை 01. மின்வாரியத்திற்கு வீடுகளுக்கு மின் இணைப்பிற்காக தொகை வழங்குதல்” (DPC 2225 80 800 0915).

3. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.380/து.செ.(ஆர்.ப)/98 நாள் 16.10.98ன் படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. இரத்தினசாமி**
அரசு செயலர்